DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, PARAMATHY**

**CC.No. 151/2022**

**PW– 1**

| | | | |
|---|---|---|---|
| Name: | ஹேமபிரியா (LW–1) | Calling: | விவசாயம் |
| Husband Name: | விஜய் சுந்தர் | Age: | 28 |
| Village: | கொத்தமங்கலம் | Taluk: | பரமத்தி வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) on the date 13.05.2026 by Thiru. R.Silambarasan, Magistrate Clerk of this court.

**( Accused A1 and A2 are present. )**

**<u>முதல் விசாரணை=</u>**

1. நான் தற்போது கொத்தமங்கலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 23.11.2021–ம் தேதியன்று காலை 6.00 மணியளவில் நானும் எனது கணவரும் எங்களது காட்டிற்கு சென்றோம். எங்களது காட்டிற்குள் ஆஜர் எதிரிகள் இருவரும் இயல்பாக தேங்காய் பொருக்கிக்கொண்டு இருந்தார்கள். நாங்கள் வண்டியை நிறுத்திவிட்டு ஏன் எங்களது காட்டில் தேங்காய் பொருக்கிறீர்கள் என்று கேட்டோம். அதற்கு அவர்கள் நாங்கள் அவ்வாறு தான் செய்வோம் உங்களால் முடிந்ததை பாருங்கள் என்று சத்தம் போட்டு பேசினார்கள்.

02. அவர்கள் இருவரும் சேர்ந்து என்னையும் எனது கணவரையும் கெட்ட வார்த்தையால்பேச ஆரம்பித்தார்கள். சந்தியா எனது முடியை பிடித்து இழுத்து கையை முறுக்கி கீழே தள்ளி விட்டார். அப்போது எனது கழுத்தை நெறுக்கினார்கள். அதனை எனது கணவர் தடுக்க வந்தார். அப்போது எனது கணவரின் கையை வெட்டிவிட்டார்கள். அப்பொழுது சத்தம் போடவும் இப்ப

தப்பித்துக்கொண்டார்கள் அப்புறம் பார்த்துக்கொள்ளலாம் என சொல்லிவிட்டு தப்பித்து போய் விட்டார்கள். நாங்கள் முதல் உதவி சிசிச்சை எடுப்பதற்காக வேலூர் அரசு மருத்துவமனைக்கு வந்தோம். அப்போது போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் ஒன்று பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். **அந்த புகார் வாக்குமூலம் அரசு தரப்பு சான்றாவணம் 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

03. பிறகு நானும் எனது கணவரும் கோயமுத்தூர் கங்கா மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதி ஆனோம். எனக்கு எலும்பிலிருந்து சதை விலகியதால் கட்டு போட்டு அனுப்பிவிட்டார்கள். எனது கணவர் அங்கு அவருடைய நரம்பு கட்டானதால் சிகிச்சையில் இருந்தார். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் தான் அன்றைய தினம் எனது கணவரை வெட்ட பயன்படுத்திய அருவாள் ஆகும். **அந்த அருவாள் சான்று பொருள் 1 ஆககுறியீடு செய்யப்படுகிறது**. போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

கு.மு.வி.ச. 242 (3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

SUHESH K S

Digitally signed by SUHESH K S
Date: 2026.05.13 15:07:32 +0530

DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, PARAMATHY**

**CC.No. 151/2022**

**PW- 2**

| | | | |
|---|---|---|---|
| Name: | விஜய்சுந்தர் (LW-2) | Calling: | விவசாயம் |
| Father Name: | மோகனசுந்தரம் | Age: | 29 |
| Village: | கொத்தமங்கலம் | Taluk: | பரமத்தி வேலூர் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 ( Central Act 44 of 1969 ) on the date 13.05.2026 by Thiru. R.Silambarasan, Magistrate Clerk of this court.

**( Accused A1 and A2 are present. )**

**<u>முதல் விசாரணை=</u>**

01. நான் தற்போது கொத்தமங்கலத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 23.11.2021-ம் தேதியன்று காலை 6.00 மணி முதல் 6.15 மணியளவில் எனது காட்டிற்கு தேங்க பொருக்குவதற்காக சென்று இருந்தோம். நாங்கள் சென்ற போது ஆஜர் எதிரிகள் இருவரும் தேங்காய் பொருக்கிக்கொண்டு இருந்தார்கள். ஏன் பொருக்கிறீர்கள் என்று கேட்டதற்கு அவ்வாறு தான் பொருக்குவோம் உன்னால் என்ன செய்ய முடியும் என்று கேட்டார்கள். பிறகு வாக்குவாதம் ஏற்ப்பட்டது. வாக்குவாதம் அதிகமானதால் சத்தம் அதிகமானதால் சந்தியா ஹேமாபிரியாவின் முடியை பிடித்து இழுத்து கையை முறுக்கி கீழே தள்ளி பிடித்துக்கொண்டார்கள் அப்பொழுது ஹேமா அலறியவுடன் அவரை காப்பாற்ற நான் சென்றேன். நான் காப்பாற்றுவதற்காக கையை பிடித்து தூக்கும் போது எனது வலது கையில் வெட்டி விட்டார்கள்.

02. இரத்தை பார்த்தவுடன் ஹேமாவை விட்டுவிட்டார்கள். இனிமேல் காட்டிற்குள் பார்த்தால் உங்களை கொன்றுவிடுவோம் என்று தகாத வார்த்தையால் பேசி சென்றுவிட்டார்கள். அப்பொழுது நான் நடந்துக்கொண்டு சென்றேன். அப்பொழுது விஸ்வநாதன் என்பவர் வந்தார் அவருடைய உதவியுடன் ரவி என்பவரின் ஆம்புலன்ஸ் மூலம் வேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்றோம். பின்பு அங்கிருந்து கங்கா மருத்துவமனைக்கு சென்றோம். எனக்கு கையில் நரம்பு கட்டாகி இருப்பதாக சொன்னார்கள். எனக்கு அறுவை சிகிச்சை செய்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் அருவாள் தான் அன்றைய தினம் என்னை வெட்ட பயன்படுத்திய அருவாள் ஆகும். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள். **எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

கு.மு.வி.ச. 242 (3)ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

SUHESH K S

Digitally signed by SUHESH K S
Date: 2026.05.13 15:07:44 +0530